பொதுத் (தேர்தல்கள்–3)த் துறை

# செய்தி வெளியீடு

**தேர்தலின்போது வேட்பாளர்களின் புகைப்படம் வாக்குச்சீட்டில் இடம்பெறுவதற்காக, இந்திய தேர்தல் ஆணையமானது வேட்பாளர் தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் வேட்புமனுவுடன் அளிக்கக்கூடிய புகைப்படத்திற்கான அளவீடுகள் பின்வருமாறு தெரிவித்துள்ளது :–**

(i) வேட்பாளர்கள், தங்களுடைய அண்மைக்கால புகைப்படத்தை அளிக்க வேண்டும். (தேர்தல் அறிவிக்கை வெளியிடப்படும் நாளுக்கு முந்தைய மூன்று மாதங்களுக்குள் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். )

(ii) புகைப்படம் 2 செ.மீ x 2.5 செ.மீ (2 செ.மீ அகலம் மற்றும் 2.5 செ.மீ உயரம்) அஞ்சல்தலை அளவில் வெள்ளை / வெளிர் சாம்பல் நிறம் பின்னணியோடு, முழு முகமும் புகைப்படக் கருவியை நோக்கிய வண்ணம், கண்கள் திறந்த நிலையில் இயல்பான முகத் தோற்றத்தோடு இருக்க வேண்டும். புகைப்படமானது, வேட்பாளரின் வசதிக்கேற்ப வண்ணத்திலோ கருப்பு / வெள்ளை நிறத்திலோ இருக்கலாம்.

(iii) புகைப்படத்தில் இயல்பான உடையில் இருக்க வேண்டும். சீருடையில் எடுக்கப்பட்ட புகைப்படம் அனுமதிக்கப்பட மாட்டாது. குல்லாய் / தொப்பிகள் தவிர்க்கப்பட வேண்டும். அடர்வண்ணக் கண்ணாடிகளும் தவிர்க்கப்பட வேண்டும்.

தலைமைத் தேர்தல் அதிகாரி,
தமிழ்நாடு.